தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1984 மார்ச் 8.

மாசி 25, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு—2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணி அளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நெய்வேலி இரண்டாவது பழுப்பு நிலக்கரி சுரங்கத் திட்டம்.

** 61. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் மற்றும் திரு. க. மீனாட்சி சுந்தரம் :* மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) நெய்வேலியில் இரண்டாவது பழுப்பு நிலக்கரி சுரங்கத் திட்டம் எத்நிலையில் உள்ளது ?

(இ) அது எப்போது முதல் முழுமையாகச் செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

(இ) 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதுமே நெய்வேலியை நம்பிக் கொண்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தின் முழுப் பயனும் தமிழகத்திற்கே கிடைக்குமா? அடுத்து 3-வது திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

[1984 மார்ச் 8

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசு உருவாக்கியுள்ள திட்டத்தின்படி, நெய்வேலியில் 630 மெகா வாட் மின்சாரம் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டதில், 176 மெகா வாட் மின்சாரம்தான் தமிழகத்திற்குக் கிடைக்கும். ஆனால் இரண்டாவது அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில், முழு உற்பத்தியையும் தமிழகத்திற்கே தரவேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருகிறோம். 3-வது திட்டத்தை நெய்வேலி நிறுவனம் தயார் செய்து கொண்டிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, தமிழகத்திற்குத் தருவதாகச் சொல்லப்படுகிற பங்கு மிகக் குறைவாக இருக்கிறது. நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையுமே தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுமா? அங்கிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் பயன் காரணமாக நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்குத் தமிழகம் உதவியாக இருக்கும் என்ற காரணத்தால், இது குறித்து நமது அரசு மத்திய அரசிடம் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மத்திய அரசிடமும் இந்த அரசு வற்புறுத்தியுள்ளது. அது போதாதென்று இன்று மேலவையில் அது குறித்த தீர்மானம் ஒன்றும் வர இருக்கிறது.

கல்பாக்கம் அணு மின் நிலையம்.

*62. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்பாக்கம் அணு மின் நிலையத்திலிருந்து தற்போது உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டுக்கே வழங்கப்பட வேண்டும் என்று, மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற பதில் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) கல்பாக்கம் அணு மின் நிலையத்தின், முதல் பிரிவின் மின்சாரத்தை முழு அளவையும் இரண்டாவது பிரிவில் 50 சதவிகிதம் மின்சாரத்தையும் தமிழ்நாட்டுக்கு வழங்க வற்புறுத்தி வருகிறது.

(இ) எந்தவிதமான இறுதி பதிலும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.